# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - 17.04.2025</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 6835/SCIC/2023</u>**

திரு ஆபிரகாம் டேனியல் — மேல்முறையீட்டாளர்
2/264, திருச்செந்தூர் ரோடு
முருகன்குறிச்சி
பாளையங்கோட்டை - 627 002.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம் ------ பொது அதிகார அமைப்பு
திருநெல்வேலி காவல் ஆணையரகம்
திருநெல்வேலி

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ்,03/02/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ நெல்லை மாநகரக் காவல் ஆணையாளர், திருநெல்வேலி-க்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கடந்த 25/07/2020 அன்று 7/137K, நேரு நகர், ஜோதிபுரம், கொங்கந்தான்பாறை (போஸ்ட்) வசிக்கும் J.ஸ்டான்லி ஜோன்ஸ் வயது 25 பாளை பெருமாள்புரம் C3. காவல் நிலையத்தில் அதே தெருவில் வசிக்கும் பிளாட் நம்பர் 72, நேரு நகர் ஆர்.ஆபிரகாம் டேனியல் மீது புகார் தெரிவித்து அப்போது பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.செழியன் அவர்கள் விசாரித்து அவரின் உத்தரவின் பேரில் அன்று இரவு 8,00 மணியளவில் உதவி பெண் ஆய்வாளர் திருமதி.சிவகளை அவர்கள் மற்றும் ஒரு காவலர் புகார்தாரர் வழக்கறிஞர் ரூபன் அவர்கள் எனது வீட்டிற்கு வந்து சுமார் 1 மணி நேரம்

விசாரணை செய்து எனது மகளிடம் அவள் கைப்பட எழுதி கடிதத்தின் நகல் தரவும். மனுதாரரின் புகார் மனுவை மேற்கண்ட நாளில் எவ்வாறு விசாரணை செய்து முடித்து வைக்கப்பட்டது என்பதை குறித்து முழு தகவல் தரவும்” எனக் கோரியுள்ளார். பொதுத்தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாநகரம் அவர்கள் மனுதாரருக்கு கடிதம் எண்.59/த.அ.உ.ச./பொ.த.அ./கா.து.ஆ.(தலைமையிடம்)/தி.மா./2023 நாள் 21/02/2023 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 08/03/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 13/04/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 6835/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய தகவல் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 25/07/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், தலைமையிடம், திருநெல்வேலி மாநகரம் அவர்கள் ஆணையத்திற்கு அனுப்பியுள்ள C.No.628/RTIA/PIO/DC(HQrs)/TN-C/2023, dated 23/09/2024 என்ற கடிதத்தில் மனுதாரருக்கு 21/02/2023 மற்றும் 03/10/2023 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மனுதாரர், 17/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளி காட்சி வாயிலான விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்று ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.W.ஜோசப் ஜெட்சன், உதவி காவல் ஆணையாளர், மத்திய குற்ற ஆவணக் காப்பகம், திருநெல்வேலி மாநகரம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 21/02/2023 மற்றும் 23/09/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக, மனுதாரர் கோரியவாறான தகவல்கள் ஏதுமில்லை என்ற தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், வழங்கப்பட்ட தகவல் சரியானதல்ல என்றார். பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் தனது பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் தெரிவித்திருப்பது போன்ற எவ்வித விசாரணையும் நடத்தப்படவில்லை என்றார். ஆனால் மனுதாரர், அழுத்தந்திருத்தமாக விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவித்து, அது தொடர்பாக ஆணையத்திற்கு எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் அளித்தார்.**

**5. எனவே, காவல் துணை ஆணையாளர், திருநெல்வேலி (கிழக்கு), அவர்கள் மேற்குறிப்பிட்டவாறு, மனுதாரர் கூறியுள்ள புகார் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், இவ்வழக்கின் விசாரணை பிறிதொரு தேதிக்கு அதாவது 22/05/2025 தேதிய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. 22/05/2025 தேதிய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கான அழைப்பாணை (1) மனுதாரர், (2)திரு.வினோத் சாந்தாராம், காவல் துணை ஆணையாளர், திருநெல்வேலி (கிழக்கு) ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6835/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
திருநெல்வேலி காவல் ஆணையரகம்
திருநெல்வேலி

2.திரு.வினோத் சாந்தாராம்,
காவல் துணை ஆணையாளர்
திருநெல்வேலி மாநகரம்
(கிழக்கு)
திருநெல்வேலி.

**மேல்முறையீட்டாளர்**

திரு ஆபிரகாம் டேனியல்
2/264, திருச்செந்தூர் ரோடு
முருகன்குறிச்சி
பாளையங்கோட்டை - 627 002

RG/PC